

# வரலாற்றில்
# கூழமந்தல்







தொகுப்பு

**ராதா பாலன் (எ)
ரூத் பிரபாகரன்**

வெளியீடு

**திருவண்ணாமலை மாவட்ட
வரலாற்று ஆய்வு நடுவம்**

# உள்ளடக்கம்


அமைவிடம்

போக்குவரத்து

ஊர் பெயர்க் காரணம்

பொதுத் தகவல்கள்

ஊராட்சி

இயற்கையமைப்பு

நீர்நிலைகள்

கோயில்கள்

கல்வெட்டுகள்

திருவிழாக்கள்

தொல்லியல் சின்னங்கள்

வரலாற்று நிகழ்வுகள்

மசூதிகள் / தேவலாயங்கள் / சமணப் பள்ளிகள்

நாட்டுப்புற தெய்வங்கள்

ஆளுமைகள்

நீங்கா நினைவுகள்

பண்பாட்டு அசைவுகள்

இன்றைய நிலை

ஊரைச்சுற்றி

பின் இணைப்பு

# அறிமுகம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு வட்டத்தில் அமைந்துள்ள கூழமந்தல் கிராமம் ஒரு வரலாற்றுப் பொக்கிஷம். இவ்வூரில் சோழர் கால கற்றளி, விஜய கண்ட கோபாலன் காலத்திய பெருமாள் கோயில் உள்ளிட்ட பல அரிய வரலாற்றுச் சிறப்புகள் உள்ளன. இவற்றைப் பற்றியும் இவ்வூரின் பண்பாட்டு நிகழ்வுகளைப் பற்றியும் அழகாக தொகுத்துள்ளார் திருமதி. ராதா பாலன் (எ) ரூத் பிரபாகரன். திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் ஊர் வரலாறு நூலாக்க திட்டத்தின் கீழ் இந்நூலை வெளியிடுவதில் நடுவம் பெருமகிழ்ச்சி கொள்கிறது. நூலாசிரியருக்கு வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரித்தாக்குகிறேன்.

**ச. பாலமுருகன்**
செயலாளர்
திருவண்ணாமலை மாவட்ட
வரலாற்று ஆய்வு நடுவம்.



# அணிந்துரை

பேராசிரியர் கோ. தெய்வநாயகம்,
தொல்லியல் துறை ஆய்வாளர்,
கட்டடக் கலை துறைத் தலைவர்,
தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சைத் தமிழ்ச்சங்கத் தலைவர்.

இன்றைய கூழம்பந்தல் என்கிற சிற்றூர் சோழப் பேரரசன் இராஜேந்திர சோழனுடைய வரலாற்றில் இன்றியமையாத இடம் பெற்ற வரலாற்று சிறப்புமிக்க ஊராகும். கல்வெட்டுக்கள் குறிப்பிடும் இதனுடைய பழம்பெயரான பாகூர் நாட்டு விக்கிரமச் சோழபுரத்தின் வரலாற்றுச் சிறப்பிற்கு பல காரணங்கள் உண்டு.

பேரரசன் இராஜேந்திரனுடைய காலத்திலும் அவனுடைய பேராற்றல் மிக்க முதல் மகனான இராஜாதி ராஜனுடைய காலத்திலும் இவ்வூர் கங்கை கொண்ட சோழீச்சுரம் என்ற அருமையான சைவக் கற்றளியையும், வைணவத் திருக்கோவிலாக பேசும் பெருமாள் கற்றளியையும் ஒருங்கே பெற்று அங்கு வாழ்ந்த மக்களின் அகம், புறம் மகிழ்ந்து மலர்ச்சி கொள்ளுமாறு வளர்த்தெடுத்த பண்பாட்டுச் சுவடுகளாகும்.

பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள கல்வெட்டு நெருக்குவசத்தில் அமைந்த பெருங்கல்வெட்டாகும். பதினொன்றாம் நூற்றாண்டு கல்லெழுத்து அமைதிகளைக் கொண்டு இன்றும் தெளிவாக நமக்குச் சான்றளிக்கக் கூடிய ஆதாரமாகும்.

இது மட்டுமன்றி வடஆற்காடு மாவட்டப் பகுதிகளில் அன்று வாழ்ந்து கொண்டிருந்த சமணப் பெருமக்களில் சிலர் இப்பகுதியிலும் குடியேறி வாழ்ந்த போது, இராஜேந்திர சோழரின் பரிவோடு அவர்களுக்குரிய வழிபடு தெய்வத்திற்கு சிலை எழுப்பபட்டிருப்பதனை அறிகின்றபோது இராஜேந்திர சோழனின் பேராற்றல் பண்புநெறி பெரிதும் விளங்குகிறது.

'நீரின்றி அமையாது உலகு' என்பார்கள். இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் நல்வாழ்விற்கான ஆதாரங்களையெல்லாம் செய்து, ஒரு குடையின்கீழ் நல்லாட்சி செய்த தன் சீடனுக்காக குருநாதர் ஈசான சிவபண்டிதர் அமைத்த கங்கை கொண்ட சோழீச்வரமுடைய கற்றளியின் சிகரத்தைக் குடை போல அமைத்தது சிறப்பு.

அதன் பெருமையின் தொடர்ச்சியாக இன்றளவும் கூழம்பந்தல் ஊரில் பல்சமய மக்களும் மிகச் சிறப்பாக இணைந்து செயல்பட்டு வருவதனை இந்நூல் விளக்கமாகப் பதிவு செய்துள்ளது.

இவ்வூரின் பெயர்க் காரணத்தையும் இங்குள்ள பழைய கற்றளிகளின் மாட்சியினையும், சிற்பக் கலைச் செழுமைகளையும், கல்வெட்டு ஆவணங்களின் அருமைகளையும், தற்கால அமைவியல், ஊராட்சியில் அமைந்துள்ள வாய்ப்புகளையும் ஒருசேர, படங்களுடன் இந்நூலின் படைப்பாளர் திருமதி ராதா பாலன் (எ) ரூத் பிரபாகரன் அவர்கள் படைத்தளித்திருப்பது உண்மையிலேயே பாராட்டிற்குரியதாகும்.

நமது மண்ணின் மரபின் வேர்களைத் தேடி இயன்றவரை பயணித்துக் கொண்டிருக்கிற இந்நூலாசிரியரின் ஒவ்வொரு தேடலும் ஆய்வும் இது போன்ற மேலும் பல எழுத்துருவாக்கத்தினைப் படைக்க வேண்டுமென்று திருமதி. ராதா பாலன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி ராதா பாலன் (ரூத்) அவர்களின் முதல் படைப்பான 'வரலாற்றில் கூழம்பந்தல்' என்னும் இந்நூலினை வெளியிடும் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்திற்கும் வாழ்த்துகள்... வரலாற்று ஆய்வுகளும் தேடலும் நாளும் தொடரட்டும்.

– தஞ்சாவூர். கோ.தெய்வநாயகம்.

# ஆசிரியர் உரை

ஒரு நெடிய வரலாற்றின் சுவடுகளைச் சுமந்திருந்த கூழமந்தல் எனும் இவ்வூரானது, தன் பழைய பெருமை களை மறந்தபடி, எது இலக்கு என்று தெரியாதபடி இவ் வூரும் ஊர் மக்களும் பயணித்துக் கொண்டிருக் கையில், இவ்வூரின் தொன்மைகளைத் தேடி, அதனை அறிவதற்காக பயணித்த போது, ஊரின் பெரியவர்கள் திரு. வ. பக்தவத்சலம், முன்னாள் தமிழாசிரியர் அவர்கள், கிராம நிர்வாக அலுவலர் திரு. பாலகிருஷ் ணன் அவர்கள், திருமதி. ராதாசெல்வி வெங்கட்ராமன் பஞ்சாயத்து தலைவர் அவர்கள், திரு. அன்வர் பாஷா அவர்கள், செல்லி அம்மன் கோவிலில் பூஜை செய்யும் திருமதி. காந்திமதி அவர்கள் ஒரு பழைய கல் மண்டபத் தினை சீர் செய்து சிவ வழிபாட்டில் இறங்கியிருக்கிற, தம்பி பிரபாகரன் மற்றும் அவரின் நண்பர்கள், மகாவீரர் ஜூனாலயம் முதல் செல்லி அம்மன் வரை அடையாளம் காட்டிய மாணவி செல்வி. ஸ்வாதி, மருத்துவர் கே. ரவிச் சந்திரன் என இந்நூல் தொகுப்பின் போது சந்தித்த ஒவ் வொருவரும் சொன்ன தகவல்களும் செய்திகளும் மிக வும் சுவையானவை! இவர்களுடன் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் செயலாளர் திரு. ச. பாலமுருகன் அவர்கள் அளித்த ஊக்கமும் ஒன் றாக அவற்றிலிருந்து பெற்றதன் ஒரு பகுதியே ‘வரலாற் றில் கூழமந்தல்’ எனும் இந்நூலாக்கம் பெற்றிருக்கிறது.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, சகல பொருட் களும் கிடைக்கிற கூலவாணிகம் போல, சைவம், வைணவம், சமணம், இஸ்லாம், என சர்வ மதத்தவர் களும், இணைந்து வாழ்கின்ற இவ்வூருக்கு கூழமந்தல் என்கிற பெயர் மிகவும் பொருத்தமானதே என்பதை அறிந்தேன், மனம் மகிழ்ந்தேன்.

– ராதா பாலன் (எ) ரூத் பிரபாகரன்.

# வரலாற்றில் கூழமந்தல்

## 1. இருப்பிடம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் அனக்காவூர் வட்டத்தில் அமைந்துள்ள ஊராட்சி கூழமந்தல். இவ்வூராட்சியானது ஆரணி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட செய்யாறு சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள ஒரு சிற்றூராக அமைந்திருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தின் பெருமைமிகு நகரங்களில் ஒன்றாக, சிறப்புற விளங்கிய ஊரென்று சொன்னால் நாம் விழி விரிக்க மட்டுமே செய்வோம்.

## 2. போக்குவரத்து

சென்னையிலிருந்து 75 கி.மீ. தொலைவிலுள்ள காஞ்சிபுரத்திலிருந்து 18 கி.மீ. தொலைவிலும் வந்தவாசியிலிருந்து 22 கி.மீ. தொலைவிலும் கூழமந்தல் அமைந்துள்ளது. அலைகடல் நடுவே பல கலம் செலுத்தி கிழக்காசியாவினையே தன் ஆட்சிப் பரப்பின் கீழ் வைத்திருந்த இராஜேந்திரச்சோழர் காலத்தில், ஆகச்சிறந்த நகரமாக விளங்கினாலும் தற்போது சரியான பேருந்து வசதி இல்லாத கிராமமாகவே இருக்கிறது.

ஆம், காஞ்சிபுரம் வந்தவாசி செல்லும் சாலையில் செல்லும் எல்லா பேருந்துகளும், இங்கு நிற்பதில்லை, குறிப்பிட்ட பேருந்துகள் மட்டுமே நின்று செல்கின்றன. சென்னையிலிருந்து காஞ்சிபுரம் வந்து வந்தவாசி வழிப் பேருந்துகளின் வழியாகவே கூழமந்தலுக்குச் செல்ல முடியும். விழுப்புரம், திருவண்ணாமலையிலிருந்து வருபவர்கள் வந்தவாசி வழியாக காஞ்சிபுரம் செல்லும் பேருந்துகளில்தான் வரமுடியும். பெரும்பாலும், தனியார் பேருந்துகளே கூழமந்தலில் நின்று செல்கின்றன.



## 3. கூழமந்தல் பெயர்க் காரணம் :

கூழம் எனும் பண்டு தமிழ்ச்சொல்லுக்கு எள், திலம், திலகம், கூழகம் என்ற பொருள்கள் உண்டு. பந்தல் எனும் சொல்லுக்கு ஓடும் சாலை, பந்தர் விதானம் என்ற பொருள்கள் உண்டு. அன்று பல்லவர்களின் ஆட்சிகாலத்தில் தலைநகரான காஞ்சிபுரத்திலிருந்து பழையாறை, குடந்தை எனும் கும்பகோணம் மற்றும் சங்ககாலம் முதல் துறைமுக நகரான பூம்புகார் போன்ற நகரங்களுக்குச் செல்லும் நெடுஞ்சாலை இவ்வூரின் வழியாகச் சென்றது. ஆயின் இப்பகுதிகளில் எள்பயிர் அதிகமாக விளைந்ததால் எள் விளையும் சாலை எனும் பொருளில் கூழம்பந்தல் என்ற பெயர் வந்திருக்கலாம்.

மேலும் பலா மரங்களில் கூழன் என்றொரு வகை உண்டு. அம்மரங்கள் மிகுந்திருக்கிற பகுதி என்பதனால் கூழம்பந்தல் என்ற பெயர் வந்திருக்கலாம் என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் இங்கு பலா மரங்கள் அதிகமில்லை என்பதுவும் கவனிக்கத்தக்கது.

அதே நேரத்தில் கூலம் என்றால் வணிகம் என்ற பொருளுண்டு. பல்லாண்டுகளாக இப்பகுதியில் விளையும் தானியங்கள் முதல் வளர்க்கின்ற ஆடு, மாடுகள் வரை விற்கும் வணிகச் சந்தையானது இவ்வூரில் தற்போது பள்ளி அமைந்திருக்கிற அன்றைய புளியந்தோப்பிலிருந்து செல்லியம்மன் கோவில் ஊருணிக் கரை வரை அமைந்திருந்தது.

இவ்வூரில் கூலவாணிகம் என்கிற வணிகச் சந்தை நடைபெறுவதனையொட்டி வரி வசூலிக்கப்பட்டிருக்கிறது.

சுதந்திரத்திற்கு முந்தைய காலங்களில் சென்னை இராஜதானியிலிருந்து சிப்பாய்கள் வணிகச் சந்தையன்று காவலர்களாக குதிரையில் வந்து சென்றிருக்கிறார்கள் என்றும் அதனைத் தானே கண்டும் கேட்டும் இருப்பதாகவும், இதனாலேயே இவ்வூர் கூலமந்தல் என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்று இவ்வூரின் வயதிற் மூத்த பெரியவர் திரு.பக்தவத்சலம், முன்னாள் தமிழாசிரியர் அவர்கள் சொன்ன செய்தியும் கவனிக்கத்தக்கதே.

ஒருகாலத்தில் வாரத்தின் புதன்கிழமைதோறும் வணிகச்சந்தை நடைபெற்றதால் கூலமந்தல் என்றழைக்கப்பட்டதாகக் கூறப்படும் இவ்வூரில் இப்பொழுதெல்லாம் சந்தைகள் கூடுவதில்லை என்பதுவும் வேதனையான செய்தியே! இவையெல்லாவற்றையும் விட, சோழமண்டலம் என்ற பெயரினைச் சரியாக உச்சரிக்கத் தெரியாத ஆங்கிலேயர்களால் திருவல்லிக்கேணி என்ற பெயர் ட்ரிப்ளிக்கேன் என்றானது போல, தஞ்சாவூர் என்ற பெயர் டான்ஜூர் என்றானது போல, சோழமண்டலம் என்ற பெயரினை ஆங்கிலத்தில் CHOZLA MANDAL என வாசித்தபோது ஏற்பட்ட குழப்பத்தில் கூழமண்டல் என்றாகி இன்று கூழமந்தல், கூழம்பந்தல் என்றாகிவிட்டது என்று சொல்வோரும் உண்டு.

## 4. கூழமந்தலின் முற்காலப் பெயர் :

அலைகடல் நடுவே பல கலம் செலுத்திய இராஜேந்திரசோழ மன்னர் காலத்தில், ஜெயங்கொண்ட சோழமண்டலத்து காழியூர் கோட்டத்து பாகூர் நாட்டு நகர் விக்கிரமச் சோழபுரம் என்ற பெயரில் இவ்வூர் அழைக்கப்பட்டதாக கூழமந்தலிலுள்ள கங்கை கொண்ட சோழீச்வரர் திருக்கோவில் கல்வெட்டு சொல்கிறது. [ 1046 / தொ.ஆ 413, 1902 ]

கி.பி.1012 முதல் 1044 வரை சோழநாட்டினை ஆட்சி செய்த இராஜேந் திரச் சோழரின் சிறப்புப் பெயர்களிலொன்று விக்கிரமச் சோழன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 5. கூழமந்தல் ஊர் எல்லைகள் :

கிழக்குத் திசையில் உக்கல் எனும் ஊரும், வடக்குத் திசையில் திருப் பனாங்குளமும், தெற்கில் பாகூர் ஊரினையொட்டி ஓடிய பாகூரான் கால் வாயும், மேற்கில் ஆக்கூர் ஊரும் கூழமந்தல் ஊரின் எல்லைகளாக இருக் கின்றன !

## 6. கூழமந்தல் ஊராட்சி :

கூழமந்தல், கூழமந்தல் காலனி, பெண்டை, வெள்ளாமலை என்கிற பகு திகள் அடங்கிய கூழமந்தல் ஊராட்சியாகச் செயல்பட்டுக் கொண்டிருக் கிறது. இன்றைய காலக் கணிப்பில் சுமார் மூவாயிரம் மக்கள் தொகை கொண்ட ஊராட்சியாக இருக்கின்ற கூழமந்தல் பல்லாண்டுகளுக்கு முன் னால் பல்லாயிரம் மக்கள் கொண்டாடுகிற பூமியாக விளங்கியிருக்கிறது.

## 7. தேர்தல்களில் கூழமந்தல் :

ஆரணி பாராளுமன்ற தொகுதியிலும் செய்யாறு சட்டமன்றத் தொகுதி யிலும் அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்திலும் அடங்கிய கூழமந்தல் ஊராட்சி எண் 140 கிராமத்தில் வாக்கு மைய எண் 60, 61 ஆகிய இரு வாக்களிப்பு மையங்கள் கூழமந்தல் பள்ளியில் அமைக்கப்பட்டு தேர்தல் காலத்தில் செயல் படுகின்றன. 2011ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி கூழமந்தல் ஊராட் சியில் ஆண் வாக்காளர்கள் 786 பேர்களும், பெண் வாக்களர்கள் 774 பேர் களும் உள்ளனர்.

## 8. ஊராட்சி சில நினைவுகள் :

கூழமந்தல் ஊராட்சியின் முதல் பஞ்சாயத்து ஆரம்பித்த 1930 –31 ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டு வரை திரு.வரதப்பக் கவுண்டர் மகனான திரு. வ. இராஜு கவுண்டர் என்னும் மனிதரே கூழமந்தல் பஞ்சாயத்துத் தலை வராக இருந்திருக்கிறார்.

கூழமந்தலின் முதல் பஞ்சாயத்து தலைவர் முதலாம் பராந்தகச் சோழரின் பன்னிரெண்டாம் ஆட்சியாண்டில் வெட்டிய உத்திரமேரூர் கல்வெட்டுகள் சொல்லியபடியே குடவோலை முறைப்படியே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்ற தகவல் சுவையானதே.

அதுமட்டுமின்றி திரு. இராஜுகவுண்டர் பஞ்சாயத்துத் தலைவர் பதவியில் இருக்கும்போது கூழமந்தல் காலனியைச் சேர்ந்த திரு. சேரமன் அவர்களும், பெண்டையைச் சேர்ந்த திரு.தேவராஜு நாயுடு அவர்களும், கூழமந்தலைச் சேர்ந்த திரு. சேராமுட்டார் எனும் இஸ்லாமியரும் பஞ்சாயத்து உறுப்பினர்களாகச் செயல்பட்டிருக்கின்றனர் என்பதுவுமொரு சுவையான செய்தியே.

அன்றைய காலகட்டத்தில் கூழமந்தல் வடஆற்காடு மாவட்டத்தினைச் சார்ந்த பகுதியாக இருந்தது.

1956 முதல் 1966 வரை திரு. இராஜுகவுண்டர் அவர்கள்
பஞ்சாயத்து தலைவராகவும், அதன் பின்னர்
1966 முதல் 1971 வரை திரு. கிருஷ்ணன் நாயக்கர் அவர்களும்
1971 முதல் 1988 வரை திரு. சிவப்பிரகாசம் அவர்களும்
1991 முதல் 1996 வரை திரு. கரீம் பாய் அவர்களும்
1996 முதல் 2001 வரை திரு. எம்.எஸ்.மணி அவர்களும்
2001 முதல் 2006 வரை திரு. கரீம்பாய் அவர்களும்
2006 முதல் 2011 வரை திரு. தங்கவேல் அவர்களும்
2011 முதல் 2016 வரை திரு. தணிகைவேல் அவர்களும்

பணியாற்றி வந்துள்ளனர்.

2019 முதல் நாளது வரை திருமதி. இராதா செல்வி வெங்கட்ராமன் அவர்கள் கூழமந்தல் ஊராட்சியின் முதல் பெண் பஞ்சாயத்து தலைவராக பணியாற்றி வருகின்றார்கள்.

## 9. நீராதாரங்கள் :

பெரிய ஏரி, ஜம்பை ஏரி, மாகாளி ஏரி என்கிற மவுனேரி ஆகிய மூன்று பெரிய ஏரிகளும் ஐந்து குளங்களும் ஆறு குட்டைகளும் கிணறுகளும் அமைந்துள்ளன. தற்போதைய நிலையில் கூழமந்தல் ஊராட்சியில் ஆறு மேல் நிலைக் குடிநீர்த் தொட்டிகள் அமைந்துள்ளன.

இந்தக் குடிநீர்த் தொட்டிகளுக்கான தண்ணீர் ஆழ்துளைக் கிணறு மூலமாக நீரேற்றம் செய்யப்படுகிறது. கூழமந்தல் ஊராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பது நேற்றைய கிராமங்கள் இன்றைய நகரங்களுக்கு இணையாக வளர்கின்றன, வளர முயற்சிக்கின்றன என்பதும் மகிழ்வுறத் தக்கதே.


ஊராட்சி மன்ற அலுவலகம்






சிவ



## 10. கல்வி நிலையங்கள் :

திரு. ராஜுகவுண்டர் பஞ்சாயத்துத் தலைவராக இருந்த 1933–34 ஆம் ஆண்டில் கூழமந்தலில் பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆரம்பிக்கப்படுகிறது. அப்பள்ளியின் முதல் ஆசிரியர்களாக சுமங்கலி கிராமத்தினைச் சேர்ந்த திரு. சின்னச்சாமி கவுண்டர் மற்றும் கூழமந்தலைச் சேர்ந்த திரு. கே.ஆர். சீனிவாசன் ஆகியோர் பணியாற்றினர். இத்தகவலை நமக்குச் சொன்னவர் அப்பள்ளியிலேயே தன் தொடக்கக் கல்வியினை ஆரம்பித்துப் படித்த முன்னாள் மாணவர் திரு. ஆர். பக்தவத்சலம் பணி நிறைவு தமிழாசிரியர் அவர்கள்.

தற்பொழுது அரசு தொடக்கப் பள்ளியும் அரசு உயர்நிலைப் பள்ளியும் கூழமந்தலில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளி முடித்த மாணவர்கள், மேல்நிலைப் பள்ளிக்காக அருகிலுள்ள உக்கல் மற்றும் பெரு நகர் ஊரிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு செல்கின்றனர். கூழமந்தல் ஊராட்சிக்குட்பட்ட வெள்ளாமலை கிராமமானது செய்யாற்றின் கரையில் அமைந்துள்ளது.

அவ்வூரில் நவாப்களின் காலத்திய மண்ணாலான கோட்டை ஒன்று முன்பு இருந்திருக்கிறது. காலப் போக்கில் வெள்ளப் பெருக்கினாலும் கவனிப் பின்மையாலும் உக்கல் கோட்டைக் கரை என்றழைக்கப்பட்ட அந்த மண் கோட்டையானது மண்ணோடு மண்ணாகிப் போனது. தற்போது அவ்விடத் தில் வெள்ளாமலை ஆரம்பப் பள்ளி அமைந்திருக்கிறது. கூழமந்தல் மக்க ளின் அறிவுலகத் திறவுகோலாக கலைவாணர் நூலகமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

## 11. மருத்துவம் மற்றும் சுகாதாரம் :

கூழமந்தல் கிராமத்தில் தாய் சேய் நல மருத்துவ மையம் அமைந்துள் ளது. தனியார் மருத்துவமனை ஒன்றும் அமைந்துள்ளது. கால்நடை மருத்துவ மனையும் தனிக்கட்டடத்தில் இயங்கி வருகிறது.

## 12. தொழில் :

“இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்கள்தான், கிராமங்களில் வாழ்கிற விவசாயிகளை நம்பியே இந்தியாவின் வளர்ச்சி அமைந்திருக்கிறது” என்ற தேசப்பிதா மகாத்மா காந்தியின் சொல்லுக்கு ஏற்ப கூழமந்தலும் விவசா யத்தை நம்பிய ஊராகவே இருக்கிறது. ஏரிப் பாசனத்தையும் கிணற்றுப் பாச னத்தையும் மட்டுமே நம்பி இருக்க வேண்டிய நிலையில் நெற்பயிரானது ஒரு போக விவசாயமாகவும் வான் பொழிகிற மழையினை மட்டுமே நம்பிய மானா வரிப்பயிர்களாக கம்பு, கேழ்வரகு போன்ற சிறுதானியப் பயிர்களும் நிலக் கடலை, எள் போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களும் உளுந்து, பச்சைப்பயிறு போன்ற பயறு வகைகளும் சில காய்கறிகளும் விளைவிக்கப்படுகின்றன.

ஆனால், சுழன்றும் ஏர்பின்னது உலகம் என்ற வள்ளுவனின் மொழி மறந்த சூழலால் விவசாயம் குறுகி, பிற தொழில்களை நோக்கிய பயணத்தின் விளை வாக நகரத் தொழில்களை நோக்கிய பயணத்தில் இன்றைய தலைமுறை சென்று கொண்டிருக்கிறது! அதன் விளைவு, இளைய தலைமுறை விவ சாயத் தொழில்களை மறந்து சிப்காட் பணிகளையும் தகவல் தொழில் நுட்பத் துறைப் பணிகளையும் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்றாலும் கால வோட்டத்தில் இதுவும் தவிர்க்க முடியாததே.

## 13. அரசு அலுவலகங்கள் :

- கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்
- ஊராட்சி மன்ற அலுவலகம்
- துணை வேளாண்மை விரிவாக்க மையம்
- விதை சேமிப்புக் கிடங்கு
- நியாயவிலைக் கடை
- இந்துசமய அறிநிலையத்துறை பயணிகள் தங்கும் விடுதி
- தொல்லியல் துறையின் பயணிகள் தங்கும் விடுதி

## 14. கூழமந்தல் கோவில்கள் :

கோவில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம் என்றது அன்றைய பழமொழி, இன்றும் கூட அப்படித்தான் வீதிக்கொரு கோவில் அமைந்தி ருக்கிற காலகட்டத்தில் கூழமந்தல் ஊரினை இரண்டாகப் பிரிக்கும் வண் ணம் வடக்கு தெற்காகச் சென்று கொண்டிருக்கிற சாலையின் இடதுபுறம் செல்லும் கிழக்கு வீதியில் அரை பர்லாங் தொலைவில் இடதுபுறத்தில் கிழக்கு நோக்கியபடி சற்றே சாய்ந்தபடி, ஆறாம் நூற்றாண்டு காலத்தியது என்று சொல்லப்படுகின்ற, நின்ற கோலத்திய பிள்ளையார் பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக கூழமந்தல் வீதி ஓரத்தில் பல்லாண்டு காலம் வெயிலில் காய்ந்து கொண்டிருக்கிறார்.

கூழமந்தல் ஊரின் வடகிழக்கில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய விசாலாட்சி உடனுறை கங்கை கொண்ட சோழீச்வரர் கோவில் சோழர் காலக் கட்டடக்கலைக்குச் சாட்சி சொல்லிக் கொண்டிருக்கிறது. இவ்வூரின் தென் கிழக்குத் திசையில் சிறிய முத்துமாரியம்மன் அரசமரத்தடி நாகர் சிலை களுடன் கோவில் கொண்டிருக்கிறாள். இவ்வூரின் தென்திசையில் துர்க்கை அம்மன் என்ற பெயருடன் கொற்றவை எனும் காளி நான்கு அடி உயரத்தில் ஒரு சிறுகோவிலில் ஈச்சமரத்தடி நிழலில் குடி கொண்டிருக்கிறாள். அவள் சோழர் காலத்தின் அடையாளத்தினை சுமந்தபடி சின்னஞ்சிறு கோவிலில் நின்றிருக்கிறாள். காஞ்சியிலிருந்து வரும் வழியில் கூழமந்தல் ஊரின் சாலை யின் வலதுபக்கத்தில் முதலில் இஸ்லாமியர்களின் மசூதி அமைந்துள்ளது.

இப்பொழுது மினார் எனும் தொழுகைக்கான கோபுரங்களுடன் புதிதாகக் காட்சியளிக்கும் இம்மசுதியானது பல்லாண்டுகளாக ஓலைக் கொட்டகையிலிருந்து செயல்பட்டு வந்துள்ளது. தினமும் ஐந்துவேளை பாங்கொலி கேட்கும் வண்ணம் மினார்களுடன் அமைந்துள்ள இன்றைய மசுதி சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது.

அதனை அடுத்த வீதியின் முடிவில் பேசும் பெருமாள் கோவில் எனும் வைணவத்தலம் அமைந்துள்ளது.பேசும் பெருமாள் கோவில் அமைந்துள்ள வீதிக்கு அடுத்த வீதியின் தொடக்கத்தில் நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பஜனைமடம் ஒன்றும் அமைந்துள்ளது. பஜனைமடம் இருக்கும் மேற்கு வீதியின் முடிவில் அரசமரத்தின் முன் விநாயகர் கோவிலும், பக்கத்திலேயே நவக்கிரகச் சந்நிதிக் கோவிலும் அமைந்துள்ளது. விநாயகர் கோவிலின் முன்பாக தெற்கு நோக்கிச் செல்லும் வீதியில் பாழடைந்த பத்தடி அகலத்தில் சுமார் முப்பது அடி நீளத்தில் அமைந்த பழங்கால செங்கல் மண்டபம் ஒன்று காணப்படுகிறது. செங்கல் மண்டபத்தின் முன்னால் பதினாறு கால் மண்டபம் ஒன்று, முப்புறம் அடைக்கப்பட்டு, வடதிசை சுவற்றில் தென்திசை நோக்கிய விநாயகரின் புடைப்புச் சிற்பத்துடன் அமைந்துள்ளது.

சாலிவாகன சகாப்தத்தில் **1667** ஆம் ஆண்டு ஆடி மாதம் பூச நட்சத்திரத்துடன் கூடிய அமாவாசை நாளன்று வைசிய குலத்து மகரிஷி கோத்திரத்தாரால் தான தர்மமாக செய்விக்கப்பட்ட மண்டபம் என்கிற கல்வெட்டுத் தகவலோடு அமைந்திருக்கிறது.

பதினாறு கல் மண்டபத் தூண்களில் தசாவதாரச் சிற்பங்களும் நடன சிற்பங்களும் நாயக்கர் கால கட்டுமான அழகுடன் அமைந்திருக்கிறது. தற்போது இம்மண்டபம் ஒரு புதிய சிவன் கோவிலாக இவ்வூர் இளைஞர்களால் உருமாற்றம் பெற்றிருக்கிறது. இம்மண்டபத்தில் தற்போது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற சிவலிங்கமானது ஊரின் தென்திசையிலுள்ள ஊருணியினைத் தூர் வாரும் போது கிடைத்தது. அதனாலேயே ஜலகண்டேஸ்வரர் என்ற பெயரில் கல் மண்டபத்தில் குடி கொண்டிருக்கிறார்.

கூழமந்தல் ஊரின் மேற்குப்பகுதியில் நான்காவது வீதியிலிருந்து நேராகச் சென்றால் நேற்றைய வயற்புறத்தில், கவனிப்பாரற்றுக் கிடந்த மகாவீரர் தற்போது புதிதாக எழும்புகிற வீடுகளுக்குப் பின்னால் தனிமண்டபத்தில் சுற்றுப்பிராகாரம் எல்லாம் அமைத்தபடி ஸ்ரீமஹாவீரராக ஜீனாலயம் கொண்டிருக்கிறார். ஜீனாலயம் செல்லும் வழியில், அரசு வேளாண்மை விரிவாக்க மையத்தின் பின்புறம் நடுகல்லில் சஞ்சீவி மலையினைத் தாங்கியபடி அனுமன் பறக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார். அனுமனின் தென்திசையில் மாடு, கன்றுகள் இறங்கும் வண்ணம் கருங்கற் பாறைகளால் அமைக்கப்பட்ட சாய்தளப் பாதையுள்ள ஊருணி அமைந்துள்ளது. ஊருணியின் கிழக்குக் கரையில் வேடல் அம்மன் கோவிலும் ஊருணியின்

மேற்குக் கரையில் படித்துறையும் படித் துறையின் மேல் நவநாகர் சிலை களுடன் சூலமும் அமைந்த அரசமரத்தடியும் அமைந்திருக்கிறது. அதன் பக்கத்திலேயே செல்லிஅம்மன் கோவில் கட்டுவதற்கான ஏற்பாடுகளால் பாலாலயம் செய்யப்பட்ட செல்லி அம்மன் கொட்டகையில் எட்டுத் திருக்கரங் களுடன் அருளாட்சி செய்கின்றாள்.

## 27 நட்சத்திர கோவில் :

உக்கம் பெரும்பாக்கம் கிராமத்திற்கு தெற்கில், கூழமந்தல் ஏரிக் கரை யில், அசுவினி முதல் ரேவதி வரையுள்ள இருபத்தியேழு நட்சத்திரங்களின் விருட்சங்களையே அதிதேவதையாகக் கொண்டு 27 நட்சத்திரக் கோவில் அமைந்துள்ளது.

அன்றைய மனிதன் இயற்கையினை வணங்கினான். அதுபோல் இன்றும் இயற்கையின் அங்கமான மரங்களை வணங்கினால் அதுவும் அவர வர்க்கு உரித்தான நட்சத்திர மரங்களை வணங்கினால் நாம் செழிப்போம், நாடும் செழிக்கும் என்ற நோக்கில் அமைந்த இக்கோவிலின் நடுவில் உள்ள அத்தி மரத்தில் ஆயிரம் ருத்ராட்சங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட அத்தி விருட்ச சஹஸ்ர லிங்கம் காஞ்சி காமகோடி மடத்தின் சார்பில் அமைக் கப்பட்டுள்ளது.

## செல்லியம்மன் கோவில் :

கூழமந்தல் ஊரின் தென்மேற்குத் திசையில் ஊரின் காவல் தெய்வமாக கோவில் கொண்டிருக்கும் இருக்கும் செல்லி அம்மன் கோவில் ஒரு காலத் தில் சிறியதோர் கற்கோவிலாக இருந்திருக்கிறது. செல்லி அம்மன் என்ற ழைக்கப்படுகிற அம்மனை நோக்கும் போது, எட்டுத் திருக்கரங்களுடன் காட்சி தருகிறாள் . வலது கையில் சூலமும் வலது பின் மூன்று கரங்களில் வலது மேற்கரத்தில் உடுக்கையுடன் கூடிய நாகாபரணச் சூலமும், வலது நடுக்கரத்தினில் வாளும் கீழ்க்கரத்தினில் அங்குசமும் இடது முன் கரத்தி னில் குங்குமக் கொப்பரையும் இடது பின் மூன்று கரங்களில், மேல்க் கரத்தினில் அக்கினிச் சூலமும் இடது நடுக்கரத்தினில் கேடயமும் கீழ்க்கரத் தினில் பாசமும் தாங்கிய வண்ணம் தீச்சுடர் கொண்ட மகுடத்துடன் வலக் காதினில் பிரேத குண்டலமும் இடக் காதினில் பனையோலைச் சுருளும் அணிந்து, உத்குடி ஆசனத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிக்கிறாள்.

இந்த செல்லி அம்மனைப் பற்றிய சுவையான செவிவழிச் செய்தியொன் றினை கதையாக ஊர் மக்கள் சொல்கின்றனர். ஒருமுறை சென்னையிலி ருந்து செங்குந்தர் வகுப்பினைச் சார்ந்த குடும்பத்தார்கள், வந்தவாசி அருகி லிருக்கின்ற வெள்ளாங்கடையில் இருக்கின்ற தங்களின் குல தெய்வக் கோவிலுக்குச் சென்று வழிபாடுகள் முடிந்து திரும்புகையில் மழை பொழி

கிறது. செய்யாற்றினைக் கடந்து செல்ல முடியாதபடி வெள்ளம் பெருக்கெடுத்துச் செல்கிறது. குடும்பத்தினர் அனைவரும் தவிக்கின்றனர். இரவின் மடியின் இருளின் பிடியில் புதிய இடத்தில் வழி தெரியாமல் ஏதேனும் உதவி கிடைக்காதா ? என்று தவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஒரு சிறு பெண் குழந்தை வருகிறாள். தவித்துக் கொண்டிருக்கிற குடும்பத் தலைவரின் கரம் பற்றுகிறாள். குடும்பத்தவர்கள் அனைவரும் ஒருவர் கையினை ஒருவர் பற்றி வர, முன்னே குடும்பத்தலைவரின் கரம் பிடித்து, அந்த சிறு பெண் பெருகி வரும் வெள்ளம் தாண்டி அடர் இருளிலும் ஒளியாக வழிகாட்டியபடி நடக்கின்றாள்.

வரும் வழியில் இருந்த ஒரு மண்டபத்தில், குடும்பத்தார் அனைவரையும் தங்க வைக்கிறாள். இதோ இங்கே இம்மண்டபத்தில் தங்குங்கள். நீங்கள் அனைவரும் கவலையின்றி ஓய்வெடுங்கள். நானும் உங்களுடன் தான் இருக்கிறேன் என்கிறாள் அந்த பெண்.

சென்னையிலிருந்த வந்த குடும்பத்தவர்கள் அனைவரும் இரவில் அங்கேயே தங்குகின்றனர். மிகுந்த களைப்பினால் அவர்கள் அனைவரும் உறங்கி விடுகின்றனர். விடிந்த பின் அவர்கள் எழுந்து பார்த்தால் ? அங்கே அந்த சிறு பெண்ணைக் காணவில்லை. தாங்கள் அனைவரும் இரவில் தங்கிய இடம் அம்மன் கோவில் என்பது தெரிகிறது. குடும்பத்தவர்கள் அனைவரும் திகைக்கின்றனர். வந்தது யார் ? ஆபத்தான நேரத்தில் சிறு பெண்ணாக வந்து தங்கள் குடும்பத்தினைக் காத்தவள் செல்லி அம்மனே ! என்பதனை உணர்கின்றனர். அன்றிலிருந்து, இன்று வரை அக்குடும்பத்தினர் ஆண்டுதோறும் செல்லி அம்மன் திருக்கோவிலுக்கு வந்து திருவிழாக்கள் நடத்தி வழிபாடுகள் செய்து வருகின்றனர்.

அத்தோடு மட்டுமல்ல, தங்கள் இல்லத்தில் நடைபெறுகிற எல்லா விசேசங்களுக்கு முன்னால் கூழமந்தல் செல்லிஅம்மன் ஆலயத்திற்கு வந்து வணங்கிய பிறகே தங்கள் இல்லத்து விசேடங்களைச் செய்கின்றனர்.

## கூழமந்தல் பேசும் பெருமாள் கோவில் :

கூழமந்தல் ஊரின் ஈசான்யத்தில் கங்கை கொண்ட சோழீச்வரர் கோவில் கட்டப்பட்ட காலத்திலேயே பஸ்சிமத்தில் விஷ்ணுகிரகமான பெருமாள் கோவில் கட்டப்பட்டதெனச் சொல்லப்படுகிறது.இத்திருக்கோவில் இறைவன் பெருமாளாக நின்ற கோலத்தில், வரம் தரும் வலது கரத்துடன், இடக்கை தொடை பதிய, பின்னிரு கரங்களில் சங்கு சக்கரம் ஏந்தியபடி கம்பீரமான தோற்றத்தில் ஏராளமான அணிகலன்கள் அணிந்தபடி, சீதேவி, பூதேவியர் இருவருமே வலக்கரத்தில் தாமரை மலர் தாங்கியபடி பெருமாளின் இரு பக்கமும் நிற்க...

'தோள் கண்டார் தோளே கண்டார்' என்ற கம்பனின் வரிகளுக்கு இலக்கணம் போலும், பேரழகாய் பெருமாள் காட்சி அளிக்கிறார். பெருமாளின் முன்

நின்று நோக்கினால், இங்குள்ள இறைவன் நம்முடன் புன்னகையுடன் பேசுவது போலவே தோன்றுவதால், இவர் பேசும் பெருமாள் என்றழைக்கப்படுகிறார்.

கி.பி.1270 ஆம் ஆண்டு ஸ்ரீவிஜயகண்ட கோபாலன் எனும் தெலுங்கு சோழ மன்னன் இத்திருக்கோவிலுக்கு வந்து வணங்கி இருக்கிறான். பெருமாளின் அழகிலும் அருளிலும் கட்டுண்டவன்,

"ஸ்வஸ்திஸ்ரீதிரிபுவன சக்ர வர்த்திகள் ஸ்ரீவிஜயகண்ட கோபாலற்கு யாண்டு இருபது காலியூற் கோட்டத்து கூவழன்பந்தலான விக்கிரம சோழ புரத்து பேசும்பெருமாள் கோயில் காணியுடைய உறுபலியாந்தான் நூற்றிவுடையான் சொற்பார் பணிபந்தல்."

என இக்கோவிலின் நிலைக்காலின் இருபுறமும் கல்லில் வெட்டுவித்தான். அந்தியிலும் சந்தியிலும் மூன்று விளக்கெரிய வைக்க பதினான்கு பணமும் பதின்கல நெல்லும் கொடுக்க இவ்வூர் பட்டாச்சாரியார் ஒருவர் சூரிய சந்திரர் உள்ளவரை விளக்கெரிப்பதாகச் சொல்லி, அரசரின் நிவந்தங்களை ஏற்றுக் கொண்டதாகவும் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், கருட சேவை, திருவாடிப்பூரம், கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி மாதத்திய சனிக்கிழமைகள், வைகுண்ட ஏகாதசி, கூடாரவல்லி நோன்பு, தைப்பூசம், பங்குனி உத்திரம், திருக்கல்யாணம் போன்ற விசேஷங்கள் நடைபெற்று வருகின்றன.

## கங்கை கொண்ட கோழீச்வரர் கோவில் :

முதலாம் இராஜேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்துச் சென்று வெற்றி வாகை சூடி வந்ததன் நினைவாக, தொண்டை நாட்டில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து காளியூர்க் கோட்டத்துப் பாகூர் நாட்டு விக்கிரம சோழபுரம் என்றழைக்கபட்ட இவ்வூரில் சோழர் குல சக்கரவர்த்தி இராஜராஜ சோழருக்கும் இராஜேந்திர சோழருக்கும் குலகுருவாக இருந்த ஈசான சிவ பண்டிதர் எடுப்பித்த திருக்கற்றளி உடைய மகாதேவர் கோவில் இது.

இங்குள்ள இறைவன் மகாதேவர் என்றும் கங்கை கொண்ட சோழிச்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். ஜகந்நாதீஸ்வரர் என்றும் இங்குள்ள இறைவன் அழைக்கப்பட்டிருக்கிறார். இத்திருக்கோவில் சுற்றிலுமுள்ள நிலத்தினைவிட தாழ்நிலைத் தரை மட்டம் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

## திருக்கோயில் அமைப்பு :

கருவறை விமானம், அர்த்த மண்டபம், இடை நாழி, மகா மண்டபம், என இத்திருக்கோவில் நான்கு பிரிவாக அமைந்துள்ளது.

தெற்கு, கிழக்கு, வடக்கு என மூன்று திசைகளிலும், மகாமண்டபத்திற்கு செல்லும் வண்ணம் வாயில்கள் அமைந்துள்ளன.

நாம் தென்திசை வாயில் வழியாகச் செல்லும் போது கிழக்கு மேற்காக படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. வாயிலின் இருபுறமும் துவார பாலகர் சிலைகள் வாயிலுக்கு அழகு சேர்க்கின்றன. வாயிற்காவலர்களாக நிற்கும் துவார பாலகர்கள் இருவருமே தங்களின் கால் பாதங்கள் வாயிலை நோக்கி இருக்குமாறே நிற்கின்றனர். கிழக்குப் படிக்கட்டின் வாயிற்காவலர் நான்கு கரங்களுடன், வலது பின் கரம் தண்டனையைக் குறிக்கும் தாடண முத்திரையும், இடது பின் கரம் வியப்பின் குறியான விஸ்வமய முத்திரையும் காட்டுகிறார். வலது முன் கை உடைந்துள்ளது, ஆனாலும், பின்னோக்கிய ஆட்காட்டி விரல் எச்சரிக்கை செய்வது போலிருப்பதனால் தர்ஜனி முத்திரை என்று கொள்ளலாம். இடது முன்கரமும் இடது காலும் கதாயுதத்தின் மீதுள்ளன. வலது கால் மண்டபத்தின் தரையில் படிந்துள்ளன. தலையில் மகுடம், காதுகளில் பனையோலைக் குண்டலங்கள், கண்டிகை, சரப்பளி ஆகிய கழுத்தணிகளோடு, முப்புரிநூலும் அணிந்து, கரங்களில் கைவளையும், கால்களில் கழலும் அணிந்திருக்கிறார்.

மேல் வாயில் துவாரபாலகரும், கீழ் வாயில் துவாரபாலகரைப் போன்றே காட்சியளித்தாலும் வலது கால் கதாயுதத்தின் மேலும் இடது கால் மண்டபத்தின் தரையிலும் படிந்துள்ளன. ஆக, இரு துவார பாலகர்களும் நாங்கள் சோழ மண்டலத்தின் காவலர்கள், கங்கை கொண்ட சோழீச்வரமுடையாரின் காவலர்கள் என்று வாய் திறந்து சொல்லாமலேயே தங்களின் வீரத்தினைக் கம்பீரத்தினைக் காட்டி நிற்கின்றார்கள்.

கிழக்கு வாயிலின் முன் நந்தி வெளிப்புறத்தில் இருக்கிறார். திருக்கோவிலின் சுற்றுப் பிராகார கோஷ்டங்களில் தென் புறம் அர்த்த மண்டப கோஷ்டத்தில் கணபதி நின்ற கோலத்தில் காட்சி அளிக்கின்றனர்.

கருவறையொட்டிய கோஷ்டத்தில் முதலில் பிச்சாடனரும், அடுத்து தென்முகக் கடவுளும், அடுத்து சங்கர நாராயணரும் காட்சி அளிக்கின்றனர். திருக்கோவிலின் மேற்புற கோஷ்டத்தின் நடுவில் லிங்கோத்பவரும், வலப்புறம் நான்முகனும், இடப்புறம் மாலவனும் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கின்றனர். திருக்கோவிலின் வடபுற சுவற்று கோஷ்டங்களில் முதலில் சன்ன வீரம் தாங்கிய சுப்பிரமணியரும், கோமுகத்தின் நேர் மேல் கோஷ்டத்தில் நான்முகக் கடவுளான பிரம்மாவும் காட்சியளிக்கின்றனர். அர்த்த மண்டப கோஷ்டத்தில் துர்க்கையும் தனித்துக் காட்சி அளிக்கின்றாள்.

தென் திசை வாயில் வழியாக மகா மண்டபத்தினுள் நுழைகையில் அங்கே இடைநாழிக்கு வடக்கில் சிறு வாயிலும், தெற்கில் கல்லினால் ஆன சாளரமும் அமைந்துள்ளது. இடை நாழியிலிருந்து அர்த்த மண்டபத்தின் வாயிலை நோக்க இருபுறம், மீண்டும் இரு துவார பாலகர்கள் கம்பீரப் புன்னகையுடன் காட்சி தருகிறார்கள் .

தென்புற துவார பாலகர் படமெடுத்தாடும் அரவத்தினை தன் செவி களில் காதணியாக அணிந்தபடி, நம்மைக் கொஞ்சம் மிரள வைக்கிறார்.

நம் மிரட்சியினை சற்றே மறந்தபடி அர்த்த மண்டபத்தின் நுழைவா யிலின் மேலே பூதவரிகளில் பூதகணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு செய லினைச் செய்தபடி நம்மைக் கவர்கின்றன. அர்த்த மண்டபத்தினுள் நுழை கிறோம். அர்த்த மண்டபத்தின் உள்ளே இரு விஷ்ணு காந்தத் தூண்கள் அர்த்த மண்டபத்தினைத் தாங்குகின்றன.

உருளைத் தூண்கள் தாங்கி நிற்கின்ற மண்டபத்தின் கற்பாளங்களில் பூதவரிகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த பூத வரிகளின் வடதிசைச் சுவற்றில் தென் திசை பார்த்தபடி பூதங்களோடு நந்தியெம்பெருமானும் நந்தியெம் பெருமாட்டியும் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிப்பது வியப்பின் உச்சம், எங் கும், நாங்கள் இருப்போம்! எம் தலைவன் அவருக்குக் காவலாய், அனுக் கனாய் என்று சொல்லும் வண்ணம் கருவறையின் வாயிலில் இரு துவாரபால கர்கள் இருக்க, கருவறையின் உள்ளே தாமரைப் பீடத்தின் மேல் அமர்ந் தபடி, கங்கை கொண்ட சோழீச்வரர் ! ஈசான சிவபண்டிதர் எடுப்பித்த மகா தேவர் இராஜேந்திர சோழருக்கு நலமெலாம் அருளிய தென்னாடுடைய சிவன் அருள் பாலிக்கின்றார்.திரிதள விமானத்தைக் கொண்டுள்ள, இத்திருக் கோவில் விமானத்தின் மேற்புற சிகரப்பகுதியிலுள்ள கோஷ் டத்தில் அர்த்த நாரீஸ்வரர் அமர்ந்த கோலத்தில் காட்சி தருவது சிறப்பான தொன்றாகும். முதலாம் இராஜேந்திரச்சோழன், முதலாம் இராஜாதிராஜன், கிருஷ்ணதேவராயர் ஆகியோர் காலத்திய கல்வெட்டுக்கள் இத்திருக் கோவில் உள்ளன.

## கோயில் கட்டடக் கலை

### வாயில்கள்

### தெற்கு வாயில்

முன்புறமுள்ள மகா மண்டபத்திற்கு மேற்கு தவிர்த்த மூன்று திசை களில் வாயில்கள் உள்ளன. தென் திசை வாயில் முன்பு மேடையும், அதன் கிழக்கு மேற்குப் பக்கங்களில் படிகளும் உள்ளன. நுழைவாயிலின் இரு புறமும் வாயிற்காவலர்கள் சிலைகள் இருக்கின்றன.

கீழ் வாயிற்காவலர் நான்கு கரம் கொண்டவர். வலது பின்கரம் தண்ட னையைக் குறிக்கும் தாடன முத்திரையும், இடது பின்கரம் வியப்பைக் காட் டும் விஸ்மயா முத்திரையும் காட்டுகின்றன. வலது முன் கை உடைந்துள்ள தால் அதன் முத்திரை தெரியவில்லை. பின்னோக்கிய ஆள்காட்டி விரலால் எச்சரிக்கை செய்யும் தர்ஜனி முத்திரை கொள்வது மரபு. இடது முன்கரமும், இடது காலும் வாயிலின் பக்கம் உள்ள கதையின் மீது உள்ளன. வலது கால் தரையின் மீது படிந்துள்ளது. இரு கால்களும் வாயிலை நோக்கித் திரும்பி



**தென்திசை நுழைவாயில், மேடை, வாயிற் காவலர் சிலைகள்**

யுள்ளன. வாயிற்காவலர் மகுடம், பனையோலைக் குண்டலங்கள், கண்டிகை, சரப்பளி ஆகிய கழுத்தணிகள், முப்புரிநூல், கை வளை, கழல் முதலிய அணி களை அணிந்துள்ளார்.

மேல் வாயிற்காவலரும் இதே போன்றே உள்ளார். இடது கரம் முழுவது மாக உடைந்துள்ளது. வலது முன்கரம் தர்ஜனி முத்திரை காட்டுகிறது. வலது கால் கதை மேலும் இடது கால் நிலத்திலும் உள்ளன.

## கிழக்கு வாயில்

கிழக்கு வாயிலின் முன்னும் ஒரு மேடை உள்ளது. அதன் பக்கங்களில் வாயிற்காவலர் கோட்டங்களோ, வாயிற்காவலர்களோ இல்லை. 2013 இல் இப்பகுதியின் தோற்றம் கீழே:



**கிழக்கு வாயில்**

கிழக்கு வாயில் – 2013

**2013** இல் இருந்த பிற்காலச் செங்கல் கட்டுமானங்களான வட பக்க விமானம், வாயில் மேல் இருந்த கோட்டம், வாயில் முன் இருந்த கான்கிரீட் மண்டபம் ஆகியவை அகற்றப்பட்டு பழைமை மீட்கப்பட்டுள்ளது. கிழக்கு வாயிலின் முன்பு கோயிலை நோக்கியவாறு நந்தி உள்ளது.




## நந்தி

நந்தியின் பின்புறம் கூரை இல்லாமல் ஒரு மண்டபத்தின் தூண்கள் மட்டும் நிற்கின்றன. கூரையில்லாத் தூண்கள்.





## வடக்கு வாயில்



## வடக்கு வாயில்

- வடக்கு வாயில் மகா மண்டபத்தில் அல்லாமல் இடைநாழியில் திறக்கிறது.
- விமானம், அர்த்த மண்டபம் ஆகியவற்றின் தாங்குதளம் பிரதிவரி, ஜகதிக்கு பதிலாக பத்மவரி உடன் பத்மபந்த தாங்குதளமாக உள்ளது.
- மகாமண்டபம், அம்மன் கோயிலின் தாங்குதளம் ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை உறுப்புகளைப் பெற்று பாதபந்த தாங்குதளமாக உள்ளது.
- சுவர்ப் பகுதியும், பிரஸ்தரம் எனும் கூரைப் பகுதியும் ஒன்றாகவே உள்ளன.

## விமானம்




**விமானம் : மேற்குப் பக்கத் தோற்றம்**

விமானம் ஆறு அடிப்படைப் பகுதிகளைக் கொண்டிருக்கும். கீழிருந்து மேலாக :

1. அதிஷ்டானம் எனப்படும் தாங்குதளம். சில சமயம் உயரத்தைக் கூட்ட கீழே உபதளத்தையும் கொண்டிருக்கலாம்.
2. பித்தி என்ற பாதசுவர்
3. பிரஸ்தரம் எனும் கூரை
4. கிரீவம் என்னும் கழுத்து.
5. சிகரம் எனப்படும் தலை
6. கலசம் என்ற முடி

எண் 1, 4, 5, 6 ஆகிய உறுப்புகள், அதாவது, அதிஷ்டானம் எனப்படும் தாங்குதளம், கிரீவம் என்னும் கழுத்து, சிகரம் எனப்படும் தலை, கலசம் என்ற முடி ஆகியவை எல்லாத் தளங்களுக்கும் பொதுவானவை, எனவே ஒன்று தான் இருக்கும். ஒவ்வொரு தளமும் பித்தி என்ற பாதசுவரும், பிரஸ்தரம் எனும் கூரையும் கொண்டிருக்கும். எனவே இவை தளங்களின் எண்ணிக் கையைப் பொறுத்து ஒன்றாகவோ பலவாகவோ இருக்கும். மேற்கண்ட மூன்று தள விமானத்தில் மூன்று பாத சுவர்களும், மூன்று கூரைகளும் உள்ளன.

தாங்குதளம், பாதசுவர், கூரை ஆகிய பகுதிகள் வெளித்தள்ளி இருக்கும் மூன்று பத்திகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நடுவில் உள்ளது பத்ர பத்தி. ஓரங்களில் உள்ளவை கர்ண பத்திகள். கர்ண பத்திகளை விட பத்ர பத்தி மேலும் அதிகம் வெளித்தள்ளி இருக்கிறது. இப்பத்திகளைப் பிரிக்கும் பின்தள்ளிய பகுதிகள் அகாரைகள் எனப்படும். கீழ்த்தளத்தில் பத்ர புத்தி யிலும், இரு அகாரைகளிலும் ஆக 3 தேவ கோட்டங்கள் உள்ளன.

முதல் தளத்திலும், இரண்டாம் தளத்திலும் பத்ர, கர்ண பத்திகளில் ஒவ் வொன்றும் அகாரைகளில் ஒவ்வொன்றிலும் இரண்டு ஆக 7 தேவ கோட்டங் கள் உள்ளன.

இரண்டாம் தளத்தின் கூரை மீது கிரீவத்தைச் சுற்றி நான்கு புறங் களிலும் ஒவ்வொரு தேவகோட்டம் உள்ளது. அவற்றின் இருபுறமும் நந்திகள். நான்கு மூலைகளிலும் கர்ண கூடங்கள் உள்ளன.

விமானம் அதன் வடிவைப் பொறுத்து மூன்று விதங்களாக அமையும்.

- வட்ட வடிவம் – வேசர விமானம்
- 4 பக்க வடிவம் – நாகர விமானம்
- 6 / 8 பக்க வடிவம் – திராவிட விமானம்

இந்த விமானத்தில் கிரீவமும், சிகரமும் வேசரமாயும், கீழ்ப்பகுதி நகர மாயும் அமைந்து கலப்பு விமானமாய் உள்ளது.

பிரதிவரியில் உள்ள யாளி வரி அழகியது. ஒவ்வொரு பத்தியின் முடி விலும் இந்த யாளி வரியில் கூடு போன்று அமைக்கப்பட்டு அதனுள் வீரர்கள் முதலிய சிறு சிற்பங்கள் கவினுறச் செதுக்கப்பட்டுள்ளன.



விமானம் : வடக்குப் பக்கத் தோற்றம்



விமானம் : கிழக்குப் பக்கத் தோற்றம்

கோஷ்டச் சிற்பங்கள்விமானத்தின் அடித் தளத்தில் பக்கத்திற்கு மூன் றாக ஒன்பது தேவ கோட்டங்கள் உள்ளன. அர்த்த மண்டபச் சுவரில் பக்கத் திற்கு ஒன்றாக இரு தேவகோட்டங்கள். ஆக 11 தேவகோட்டங்கள்.

**அர்த்த மண்டப தெற்குத் தேவகோட்டம்**

இதில் நின்ற நிலை விநாயகர் உள்ளார்.

விமானம் – தெற்குப் பகுதி – கிழக்குத் தேவகோட்டம்

விமானம் – தெற்குப் பகுதி –நடு தேவகோட்டம்

விமானம் – தெற்குப் பகுதி –மேற்குத் தேவகோட்டம்



விநாயகர்



பிச்சாடனர்



தட்சிணாமூர்த்தி





விமானம் –மேற்குப் பகுதி –தெற்குத் தேவகோட்டம்
விமானம் –மேற்குப் பகுதி –நடு தேவகோட்டம்
விமானம் –மேற்குப் பகுதி –வடக்குத் தேவகோட்டம்
விமானம் –வடக்குப் பகுதி – மேற்கு தேவகோட்டம்
விமானம் –வடக்குப் பகுதி –நடு தேவகோட்டம்
நான்முகன் விமானம் –வடக்குப் பகுதி – கிழக்கு தேவகோட்டம்
இதில் இறையுரு எதுவும் இல்லாமல் வெறுமையாக உள்ளது.



**லிங்கோத்பவர்**



**நான்முகன்**

அர்த்த மண்டப வடக்குத் தேவகோட்டம்

அவுணன் தலைமிசை நின்ற தையல் – துர்க்கை

மேற்தள, கிரீவ தேவகோட்டச் சிற்பங்கள்

மேல் இரு தளங்களில் ஒவ்வொரு தளத்திலும் பக்கத்துக்கு 7 தேவ கோட்டங்கள் உள்ளன. சிலவற்றில் சிலை எதுவும் இல்லை. மற்றவற்றில் மாதொருபாகன் முதலிய சிலைகள் உள்ளன. பலவற்றை அடையாளம் காண இயலவில்லை.





## 15. கல்வெட்டுகள் :

முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் கங்கைகொண்ட சோழீஸ்வர முடையாருக்கு ஸ்ரீ ராஜாதிராஜரின் குரு 'அதிகாரிகள் பராசரியன் வாசுதேவ நாராயணனான உலகளந்த சோழபிரம்மராயன்', திருநந்தா விளக்கு ஒன்று அமைத்து அது எரிப்பதற்க நெய் வழங்குவதற்காக சாவாமுவாப் பேராடு, தொண்ணுறூம் வழங்கியதாக கல்வெட்டு செய்திகள் கூறுகிறது.

## 16. திருவிழாக்கள் :

சோழீச்வரருக்கு மாதந்தோறும் பிரதோஷ வழிபாடுகளும் ஐப்பசி மாதம் அன்னாபிஷேகமும் திருக்கார்த்திகை தீப வழிபாடும் நடந்து கொண்டிருக் கிறது. இதனைத் தவிர்த்து, பூசம் புகுந்தாடிப் பொலிந்தழகாய் ஈசன் உறை கின்ற இடை மருதீதோ என்று திருவிடை மருதூர்த் தேவாரத்திலும், "தைப் பூசங் காணாதே போதியோ" எனப் பூம்பாவையினை எழுப்புகின்ற மயிலைப் பதிகத்திலும், திருஞானசம்பந்தர் பாடிப் போற்றிய தை மாதத்திய பௌர்ணமி நன்னாளான தைப்பூச நாளன்று, கூழமந்தலிலிருந்து சுமார் மூன்று கி.மீ தொலைவிலுள்ள செய்யாறு என்றழைக்கப்படுகிற சேயாற்றின் கரையின் பெருநகர் மண்டபத்தினில் வைத்து, பெருநகரைச் சுற்றிலுமுள்ள பதினெட்டு ஊர்களின் சிவாலயங்களில் உள்ள உற்சவ மூர்த்திகள் ரிஷப வாகனத்தில்

கொண்டு வரப்பட்டு, பெருநகர், உக்கல், ஆக்கூர், மானாம்பதி, கூழமந்தல், மகாஜனம்பாக்கம், நேத்தப்பாக்கம், வெங்கடாபுரம், அத்தி, இளநீர்க்குன்றம், கீழ்நீர்க்குன்றம், சேத்துப்பட்டு, வெள்ளாமலை, தேத்துறை, விசூர், தண்டரை, இளநகர், மேல்பாக்கம், எனப் பதினெட்டு ஊர் மக்கள் கொண்டாடும் திரு விழாவாக ஆற்றுத் திருவிழா நடைபெறுகிறது.இந்த ஆற்றுத் திருவிழாவில் ஜகந்நாதீஸ்வரர் என்கிற கங்கை கொண்ட சோழீச்வரரும், உற்சவ மூர்த்தி யாகக் கலந்து கொள்ள சேயாற்றுத் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறு கிறது.

கங்கை கொண்ட சோழீச்வரர் திருக்கோவிலினுள் நுழையும் வழியில் கரங்கள் பின்னமான நிலையில் துர்க்கை சிலையொன்று கிடத்தப்பட்டிருக் கிறது. இச்சிலையானது, சோழீச்வரர் கோவிலின் அருகேயுள்ள குட்டை யினை தூர் வாரும் போது, குட்டையினுள் இருந்து எடுக்கப்பட்ட சிலையாகும்.

## 17. கூழமந்தல் கிராமத்தின் தேவைகள்

- தபால் நிலையம்
- விரிவாக்கம் செய்யப்பட்ட கால் நடை மருத்துமனை
- ஆரம்ப சுகாதார நிலையம்
- வங்கி
- கங்கை கொண்ட சோழீச்வரர் கோவில் அருகில் பூங்கா
- படிப்பகம்
- உடற்பயிற்சிக் கூடத்துடன் கூடிய விளையாட்டுத் திடல்

## இவையெல்லாவற்றையும் விட

- கூழமந்தல் கிராமத்தினைச் சுற்றிலுமுள்ள பகுதியில் தொல்லியல் துறை ஆய்வு நடத்தப்பட வேண்டும்.
- கூழமந்தல் கிராமத்தினைச் சுற்றிலுமுள்ள நீராதாரங்களான, நீர் நிலை களையெல்லாம், தூர் வாரி குடிமராமத்துச் செய்யப்பட வேண்டும்.
- அந்த குடிமராமத்து எனும், தூர் வாருதல் என்பது ஒப்புக்குச் செய்யாமல் ஆழ, அகன்ற பரப்பில் செய்தால், சோழர்கள் காலத்திய கலைப் பொக் கிஷங்கள் பல புதையுண்ட மண்ணிலிருந்து வெளி வரும்.

# பின் இணைப்பு

## கூழமந்தல் கல்வெட்டுகள்

கூழந்தல் கிராமத்தில் மொத்தம் 6 கல்வெட்டுகள் உள்ளன. அதில் கூழ மந்தல் பேசும் பெருமாள் கோயில் அருகே ஒன்றும், மண்டபத்தில் ஒரு கல் வெட்டும், கங்கை கொண்ட சோழீஸ்வரமுடையார் கோயிலில் 4 கல்வெட்டும் என மொத்தம் 6 கல்வெட்டுகள் உள்ளன. இதில் மண்டபக் கல்வெட்டு ஆவ ணம் இதழிலும் கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில் கல்வெட்டு இந்திய தொல்லியல் துறையும் பேசும் பெருமாள் கல்வெட்டு தனிநபர்களாலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### கல்வெட்டு எண் : 1

இடம் – கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில்
முன்மண்டப தெற்குப் பகுதி.
அரசு – சோழர்
அரசன் – இராஜாதிராஜன்,
முன்பதிப்பு – இ.க.ஆ.
413/1902, தெ.இ.க.ம.

குறிப்பு – இராஜதிராஜ சோழன் அதிகாரிகள் கங்கை கொண்ட சோழீஸ்வர முடையாற்கு உடையார் வாசுதேவ நாராயணன் உலகளந்த சோழ பிரம்ம ராயன் வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு 96 சாவா மூவா பேராடு பொன் ஐங்கழிஞ்சும் தானம் கொடுத்தமை.


504

No. 1046.

(A.R. No. 413 of 1902).

ON THE SOUTH WALL OF THE MANDAPA IN FRONT OF THE SIVA TEMPLE AT KULAMBANDAL, CHEYYAR TALUK, NORTH ARCOT DISTRICT.

[1]Read ...

[2]Read ...

### கல்வெட்டு பாடம் :

## கல்வெட்டு எண் : 2

இடம் – கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில் வடக்குப் பகுதி.
அரசு – சோழர்
அரசன் – முதலாம் இராஜேந்திரன்
ஆண்டு – பொ.ஆ. 1034, ஆட்சியாண்டு – 20
முன்பதிப்பு – இ.க.ஆ. 414/1902, தெ.இ.க.ம.

குறிப்பு : கங்கை கொண்ட சோழீஸ்வரமுடையார்க்கு இறையிலி தேவதானமாக 12 ஆயிரம் குழி நிலம் தானம் வழங்கிய தகவல்.

## கல்வெட்டு பாடம் :


505

No. 1047.

(A.R. No. 414 of 1902).

ON THE NORTH WALL OF THE SAME MANDAPA.

[1] Read தேச.

64


506

No. 1048.

(A.R. No. 415 of 1902).

IN THE SAME PLACE.

**பெட்டி செய்தி**

கூழமந்தல் கங்கை கொண்ட சோழீஸ்வரமுடைய நாயனார் கோயிலை தமிழக தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பக்தர்கள் வசதிக்காக யாத்திரி நிவாஸ் ஒன்றும் கட்டப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

## கல்வெட்டு எண் : 3

இடம் – கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில் வடக்குப் பகுதி.
அரசு – சோழர்
அரசன் –
ஆண்டு
முன்பதிப்பு – இ.க.ஆ. 415/1902, தெ.இ.க.ம.
குறிப்பு – முழுமைபெறாத கல்வெட்டு

## கல்வெட்டு எண் : 4



இடம் – கூழமந்தல் பேசும் பெருமாள் கோயில் அருகே உள்ள தூண்கள்.
அரசு – தெலுங்கு சோழன்,
அரசன் – விஜயகண்ட கோபாலன்.
ஆண்டு – பொ.ஆ. 1270, ஆட்சியாண்டு– 20.

குறிப்பு – பேசும் பெருமாள் கோயிலுக்கு நிலதானம் அளித்த செய்தி.

"ஸ்வஸ்திஸ்ரீதிரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீவிஜயகண்ட கோபாலற்கு யாண்டு இருபது காலியூற் கோட்டத்து கூவழன்பந்தலான விக் கிரம சோழபுரத்து பேசும்பெருமாள் கோயில் காணியுடைய உறுபலியாந்தான் நூற்றிவுடை யான் சொற்பார் பணிபந்தல்"

## கல்வெட்டு எண் : 5

கல்வெட்டு எண் 5
இடம் – கூழம்பந்தல் மண்டபக் உள்பக்க கூறை
அரசு – நாயக்கர்
ஆண்டு – சகம் 1667, பிரபாவதி, ஆடி 17 கலி 4846 பொ.ஆ. 1745
குறிப்பு – பொத்தம்பி செட்டி மற்றும் சின்னதம்பி செட்டி அவர்களால் கட்டிய மண்டபம்.

## கல்வெட்டு பாடம் :

ஸ்ரீமது சுப்பிறமணியர் துணை சாலிவாகன சகாப்த 1667 பிறபவாதிக்கு 4846 மேல் குறோதன வருஷம் ஆடி மா 17 பூச நஷ்ஷத்திரம் அம்மாவாசை வயிசியர் குலம் ஆயிரவர் கோத்திரத்தில் குலத்து மாமாகா ரிஷி கோத்திரம் சேர்ப்ககம் தாண்ட செஷயார் குமாரன் பொத்தம்பி செட்டி சின்ன தம்பி செட்டி ஆண்டார் செட்டி யிவர்கள் தற்மம்.

## கல்வெட்டு எண் : 6

இடம் – கூழம்பந்தல் கோயில் மேற்கு குமுதப் பட்டை
அரசு – கிருஷ்ணதேவராயர்
ஆண்டு – சகம் 1451, பொ.ஆ. 1529.

குறிப்பு : செயங்கொண்ட சோழமண்டத்து காலியூர் கோட்டத்து உக்கல் என் கிற விக்கிராமபரண சதுர்வேதிமங்கலத்தில் உள்ள இறையிராச்னேரி மற்றும் குறுகம்பிச்சேரி ஆகிய கிராமத்தில் உள்ள நிலத்தை 4 பேர்கள் கூட்டாக கோயிலுக்கு நிலம் தானம் செய்துள்ளனர்.





பயணியர் விடுதி



பேசும் பெருமாள்



கங்கை கொண்ட சோழிச்வரர்





செப்புத் திருமேனிகள்



பேசும் பெருமாள் கோவில்

நன்றி : **மருத்துவர். ராஜேந்திரன்,**
திருவண்ணாமலை.



## நூலாசிரியரைப் பற்றி...

1947 ஆகஸ்ட் 15 அன்று செங்கோட்டையில் ஏற்றப்பட்ட முதல் இந்திய தேசீயக் கொடியினை நெய்த பெருமைக்குரிய ஊரென்று சொல்லப்படும் தொண்டை நாட்டு குடியாத்தம் நகரில் வாழும் திரு. ஜெ.பலராமன், சகுந்தலா தம்பதியரின் மகளாகப் பிறந்து, சோழ நாட்டின் மருமகளாக புகுந்த வீடு சென்று,
இன்று நகரேஷு காஞ்சி என்றழக்கப்படும் காஞ்சிபுரத்தில் வசிக்கும் திருமதி. ராதா பாலன் (எ) ரூத் பிரபாகரன் அவர்கள், பண்டை வரலாற்று தேடல்களுடன் பயணிக்கிறவராகவும் கல்வெட்டியல் சார்ந்த கவனம் உடையவராகவும் தொண்டை மண்டல வரலாற்று ஆய்வுச் சங்கத்தின் நிறுவனர் மற்றும் செயலராகவும் மரபு நடைப் பயணங்களை வழி நடத்துகிறவராகவும் பயணித்துக் கொண்டிருக்கிறார்.
சோழ தேசத்தின் மீது சற்றே ஆர்வம் கூடியவரான அவரின் தேடல்களின் விளைவாக 'வரலாற்றில் கூழமந்தல்' என்னும் இந்நூலானது உருவாகி இருக்கிறது. இது திருமதி. ரூத் (எ) இராதா அவர்களின் முதல் நூலாகும் என்பது சிறப்பிற்குரியது.

Printed @ Subam Printers | Tiruvannamalai